DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 171/2012
Prosecution Witness PW 5
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கதிரேசன். | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் -05.12.2023.

எதிரிகள் ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. கடந்த 14.07.2010 அன்று விமான நிலையத்தில் முத்துராமலிங்கத் தேவர் பெயரினை வைக்கக்கோரி போராட்டம் நடத்தினார்கள். அன்று காலை சுமார் 09.00 மணியளவில் TN 58 1402 என்ற எண் கொண்ட அரசுப்பேருந்தானது மாயக்குருமம் பட்டியிலிருந்து மதுரை, பெரியார் நிலையம் வரும்போது செக்கானூரணிக்கு அருகில் வரும்போது சுமார் 100 நபர்களுக்கு மேல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர், அவர்கள் எங்கள் பேருந்தைக் கண்டதும் பேருந்தின் மீது கற்களைக் கொண்டு எறிந்தனர், அவ்வாறு கற்களைக் கொண்டு எறிந்ததில் பேருந்தின் முன்புறக் கண்ணாடியானது உடைந்துவிட்டது. உடைந்த கண்ணாடியானது என் முகம், கண்கள் மற்றும் கழுத்தில் பட்டு காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக நாங்கள் செக்கிங் இன்ஸ்பெக்டர் திரு. அங்குசாமி என்பவரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்து

விடுகிறேன். நீங்கள் சேதமடைந்த பேருந்தை மதுரை, பழங்காநத்தம் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு போகச் சொன்னார். பின்பு நான் அதன்படி பேருந்தினை கொண்டு வந்து நிறுத்திவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். இது குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன்பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்படுகிறார்.)

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை-

கடந்த 14.07.2010 அன்று மதுரை விமான நிலையத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பெயரினை வைக்கக்கோரி தேவரணி மக்கள் சுமார் 100 க்கும்மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். நான் அப்போது காலை சுமார் 09.30 மணியளவில் TN 58 1402 என்ற எண் கொண்ட அரசுப்பேருந்தானது மாயக்குருமம் பட்டியிலிருந்து மதுரை, பெரியார் நிலையம் வரும்போது செக்கானூரணி வடிவேல் தியேட்டர் முன்பு, பின்னால் ஊர், பெயர் கேட்டுத் தெரிந்த ஆஜர் எதிரிகள் 6 பேரும் மற்றும் இறந்த 5ம் எதிரியும் ஆகியோர்கள் ஒன்றுகூடி சட்ட விரோதமாக அரசு சொத்துக்களை சேதமாகக்கவேண்டுமென்ற எண்ணத்தில் சாதி, சமய வகுப்பு உணர்ச்சிகளை தூண்டும் வகையில் தேவர் வாழ்க, முருகன் ஜி வாழ்க என கோஷம் இட்டுக் கொண்டு நான் ஓட்டி வந்த பேருந்தின் முன்புற மற்றும் பின்புற, சைடு கண்ணாடிகளை சரமாரியாக கற்களைக் கொண்டு எறிந்து சேதப்படுத்திவிட்டனர்

என்றும், அவர்கள் எறிந்த கற்களானது என்னை நோக்கி வந்தபோது, நான் என் இருக்கையில் இருந்து குனிந்திருக்காவிட்டால் கண்ணாடித் துண்டுகள் என் மீது பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும், நான் உடனே சம்பவம் தொடர்பாக எங்கள் செக்கிங் இன்ஸ்பெக்டர் திரு. அங்குசாமி என்பவரிடம் மேற்படி விபரத்தினை தெரியப்படுத்தினேன் என்றும், மேற்படி திரு. அங்குசாமி சம்பவ இடம் வந்து மேற்படி பேருந்துகளை பார்வையிட்டு செக்கானூரணி காவல்நிலையத்தில் 10.30 மணிக்கு புகார் கொடுத்தார் என்றும், நான் காவல்நிலையம் வந்து 7 பேரையும் அடையாளம் பார்த்து, அவர்களின் ஊர், பெயர் மற்றும் விலாசங்களைத் தெரிந்து கொண்டேன் என்றும் காவல்துறையினரின் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை **(** எதிரிகள் தரப்பில்**)**

சம்பவம் நடந்த அன்றைக்கு அவ்விடத்தில் எங்கள் பேருந்துமட்டும்தான் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். சம்பவத்தன்று மதுரையிலிருந்து தேனிக்குதான் பேருந்து ஓட்டி சென்றோம் என்றால் இல்லை, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து மாயக்குரும்பம் பட்டிக்கு பேருந்தினை ஓட்டிச் சென்றோம். எங்களது செக்கிங் இன்ஸ்பெக்டரான அ.சா.1 திரு. அங்குச்சாமிக்கும், எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் மேலதிரிகாரிகளுக்கு சொல்லிவிட்டு அங்கிருந்து காவல்நிலையத்திற்கு சென்று

நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் சம்பவத்தன்று சுமார் 100 நபர்கள் என் மேல் கற்களைக் கொண்டு எறிந்தனர் என சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். நான் புகார் கொடுத்ததிலிருந்து இன்றுவரையில் என்னை போலீசார் விசாரிக்கவில்லையென்றால் சரிதான். பேருந்தினை யாரும் சேத மதிப்பிடவில்லை என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. எதிரிகளைப்பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - கதிரேசன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 171/2012
Prosecution Witness PW 6
.....

Name : திரு. கருப்புசாமி Caste :
Father's name : Calling :
Village : Religion :
Taluk : Age :

நாள் -05.12.2023.

எதிரிகள் ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகம், எல்லீஸ் நகர் கிளையில் பணியாற்றி வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்குத் தெரியாது. சம்பவம் தொடர்பாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை, Chief Inspector ஐ விசாரித்தார்கள். கடந்த 14.07.2010 அன்று காலை சுமார் 09.30 மணியளவில் மாயக்குரும்பம்பட்டியிலிருந்து மதுரை, பெரியார் நிலையம் நோக்கி பேருந்தானது வரும்போது, செக்கானூரணி தாண்டி வடிவேல் தியேட்டர் அருகில் வந்துகொண்டிருந்தபோது நான் பயணிகளுக்கு பயணச்சீட்டு கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது அது என்னவென்று பார்க்கையில் ஒரு கும்பல் வந்து பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்தனர். பின்னர் பேருந்தினை நிறுத்திவிட்டு இது குறித்து எங்கள் கிளை மேலாளர் அவர்களுக்கு தகவல் தெரியப்படுத்தினோம். அவர் Chief Inspector திரு. அங்குச்சாமி என்பவருக்கு விபரத்தினை ....

தெரியப்படுத்திவிட்டு, அவர் சம்பவ இடம் வந்து பார்வையிட்டார். பின்பு , எங்கள் பேருந்தினை கொண்டுபோய் செக்கானூரணி காவல்நிலையத்தில் நிறுத்தச் சொன்னார். நாங்கள் செக்கானூரணி காவல்நிலையம் சென்று, கண்ணாடி உடைந்த விபரத்தினை காவல் அதிகாரியிடம் தெரியப்படுத்தி, வாக்குமூலத்தில் கையெழுத்திட்டோம். இதுகுறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை **(** எதிரிகள் தரப்பில்**)**

சம்பவத்தன்று நான் பேருந்தில் நடத்துனராக வேலை பார்த்துவந்தேன் என்றால் சரிதான். நான் சென்ற பேருந்தில் சுமார் 20 க்கும் மேலான பயணிகள் இருந்தனர். சம்பவத்தன்று எந்த திசையில் இருந்து கல் வந்தது , எந்த திசையில் இருந்து யார் வந்தார்கள் என்ற விபரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான் வெளியில் எட்டிப் பார்த்தபோது சுமார் 100 க்கும் மேற்பட்டோர்கள் இருந்தனர் என்றால் சரி. பேருந்தில் இருந்த 20 பயணிகளுடன் நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் பாதி பேர் பயந்து இறங்கிவிட்டனர், நான் ஒரு 5, 6 பேர்களுடன் காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் எங்கள் பேருந்தின் ஓட்டுநர் புகார் கொடுத்தார், நான் அதில் சாட்சிக் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கையில் மாலை சுமார்

06.00 மணிஇருக்கும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும் நானும், ஓட்டுநரும் கையொப்பம் இட்டுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையத்தில் அளித்த புகாரில் சம்பவ இடத்தில் சுமார் 100 பேர் இருந்தனர் என்றும், அதில் யார் கல்லை எறிந்து எங்களது பேருந்தினை சேதப்படுத்தினர் என்று தெரியவில்லை என்றுதான் புகாரளித்தோம் என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - கருப்புசாமி

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.